# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2013 அக்டோபர் திங்கள் 30.10.2013–ம் நாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**
**குளச்சல் நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :**

24.04.2007–ல் தீர்மானம் எண்.185–ல் உள்ளபடி குடிநீர் கட்டணம் செலுத்துகையில் காலதாமதம் ஏற்படும் போது அதற்காக அபராதம் விதிக்கும் தீர்மானத்தை ரத்து செய்தல் தொடர்பாக குளச்சல் நகராட்சி மன்றத்தின் 24.11.2011–ம் தேதிய 1–ம் எண் தீர்மானமாக கொண்டு வந்த தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்கனவே ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தீர்மான நகல் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ந.க.எண்.5630/11/பி1) ஆனால் அரசிடமிருந்து அபராத தொகையை ரத்து செய்வது சம்மந்தமாக எவ்வித அரசு ஆணையும் இதுநாள் வரை கிடைக்கப்பெறாத காரணத்தால் மீண்டும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.728 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பார்வைக்கு வைக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 2**
**குளச்சல் நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :**

21.11.2011–ம் தேதிய வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினர்கள் தேர்தல் அரசு அறிவுறுத்தலின்படி நகராட்சி ஆணையாளர் முன்னிலையில் நடத்தப்பட்டு, வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினர்களாக கீழ்க்காணும் நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

1) திருமதி.R.கோமளா
2) திரு.அ. சாதிக்
3) திருமதி.ஜே. சாந்தி
4) திரு.சி. சூசைமரியான்

மேற்படி தேர்தல் நடத்தப்பட்டு இரண்டு ஆண்டுகளாக ஆகியும், இக்குழுவினை செயல்படுத்தும் ஆணையை அரசு இதுநாள் வரையிலும் வெளியிடாத காரணத்தால், இக்குழுவானது தேர்ந்தெடுக்கப்பட்டும் செயலற்ற நிலையில் உள்ளது. எனவே இக்குழுவினை செயல்படுத்தும் ஆணையினை அரசு வெளியிட கோரி தீர்மானம் கொணடு வர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.729 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பார்வைக்கு வைக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் பணிபுரிந்துவரும் துப்புரவு பணியாளர்கள் (ஆண் –27, பெண் 17) துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் 4 பேர், ஓட்டுனர்கள் 3 பேர், தெருவிளக்கு 2 பேர் மற்றும் மகப்பேறு உதவியாளர், மகப்பேறு ஆயா ஆகியோர்களுக்கு 2013–ம் ஆண்டுக்கான சீருடைகள் கோ–ஆப்டெக்ஸ் –அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து அரசு விதிமுறைப்படி 2 ஜோடி சீருடைகள் வாங்கி வழங்கவும், அதற்கான தையற்கூலி வழங்கவும் உத்தேச செலவு ரூ.1,25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/3027/10)

**தீர்மானம் எண்.730 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டது. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டங்கள் 28.02.2013, 25.03.2013 மற்றும் 29.04.2013 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேற்படி மூன்று சாதாரணக் கூட்டங்களிலும் வார்டு 11, நகர்மன்ற உறுப்பினர் திரு.ஜாண் லோப்பஸ் என்பவர் கலந்து கொள்ளவில்லை. எனவே தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, 39–ம் பிரிவின் (1) –ம் உட்பிரிவின்படி மூன்று சாதாரணக் கூட்டத்தில் கலந்து கொள்ளாததற்கு விளக்கம் கேட்டு ந.க.எண்.அ2/1941/2011 நாள் 26.05.2013–ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டது. இதுவரையிலும் அன்னாரிடம் இருந்து எவ்வித தகவலும் பெறப்படவில்லை. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 60 ( ம ) பிரிவு 50 துணை பிரிவு (1)–ன் கீழ் நகர்மன்ற உறுப்பினர் பதவியை இழந்ததாக ந.க.எண்.அ2/1941/2013 நாள் 09.10.2013 ன்படி கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. எனவே திரு.ஜாண் லோப்பஸ், வார்டு எண்.11 நகர்மன்ற உறுப்பினர் பதவியை இழந்ததை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ2/1941/2013)

**தீர்மானம் எண்.731 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சி கணனி அறையில் இருக்கும் UPS (5 KV) -க்கான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) 02.11.2013–வுடன் முடிவடைகிறது. Novateur Electrical and Digital Systems நிறுவனத்தார் கடந்த வருடம் நல்லமுறையில் பராமரித்து தந்துள்ளார்கள். அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய AMC அவசியம் என்பதால் 03.11.2013 முதல் 02.11.2014 வரையிலான AMC ஒப்பந்தத்தை UPS சப்ளை செய்த Novateur Electrical and Digital Systems நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ள அதற்கான கட்டணம் ரூ.8,427/– வழங்க மன்ற ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/3562/07)

**தீர்மானம் எண்.732 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் கதவு எண்.14/19–ல் வரி நிலுவை அதிகம் இருந்த காரணத்தினால் 21.03.2012 அன்று மேற்கண்ட கதவு எண்ணில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்டது. தற்போது மனுதாரர் வரி நிலுவை முழுவதையும் செலுத்தி விட்டு மீண்டும் குடிநீர் குழாய் இணைப்பு கோரி மனு செய்துள்ளார். எனவே மேற்கண்ட கதவு எண்ணில் உள்ள துண்டிக்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பை மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/3352/13)

**தீர்மானம் எண்.733 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013–14–ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகப்பகுதியில் அமைந்துள்ள மீன்விற்பனைக் கூடத்திற்கு அருகில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மீன் விற்பனைக்கூடம் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழின் 01.10.2013–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் ரூ.2,520/–ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1320/2013)

**தீர்மானம் எண்.734 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் திட்டப்பணிகள் நிதி ஒதுக்கீடு தொடர்பான விளம்பரத்தை மாலை முரசு பத்திரிக்கையில் தமிழக அரசின் இரண்டாண்டு சாதனை மலரில் வெளியிட்ட வகையில் ரூ.12,800/—ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/2012)

**தீர்மானம் எண்.735 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

: இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 96 எண்ணங்கள் 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சக்கரம் மற்றும் மேல்மூடியுடன் கூடிய HDPE பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் வாங்குவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.6,10,000/— க்கும், மேற்படி பணியினை IUDM திட்ட மீதமுள்ள நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.696, நாள் 29.08.2013—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 04.10.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s. Sharp Systems, Coimbatore. | மதிப்பீட்டை விட 16.03% குறைவு. ( ரூ. 5,07,840/— ) |
| 2. | M/s. Classique Decors, Nagercoil. | மதிப்பீட்டை விட 27.78% குறைவு. (ரூ. 4,36,800/— ) |
| 3 | M/s.Ravi Metal Works, Vellore. | மதிப்பீட்டை விட 17.46% குறைவு. (ரூ. 4,99,200/— ) |
| 4 | M/s.Jayapaba Traders, Thazakudi. | மதிப்பீட்டை விட 56.35% குறைவு. (ரூ. 2,64,000/— ) |
| 5 | M/s.Tirupur Technical Labour Industrial Co-op. Tirupur. | மதிப்பீட்டை விட 15.89% குறைவு. (ரூ. 5,08,704/— ) |
| 6 | M/s. Southern Solid Waste Management Service, Koottamavu. | மதிப்பீட்டை விட 15.16% குறைவு. (ரூ. 5,13,120/— ) |
| 7 | M/s. Venkadaeswara VIP Enterprises, Coimbatore. | மதிப்பீட்டை விட 34.13% குறைவு. (ரூ. 3,98,400/— ) |
| 8 | M/s. Sri Wari Textiles, Coimbatore. | மதிப்பீட்டை விட 42.86% குறைவு. (ரூ. 3,45,600/— ) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 56.35% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Jayapaba Traders, Thazakudi. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2464/13)

**தீர்மானம் எண்.736 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 21வது வார்டு நீங்கலாக.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட குடிநீரேற்றும் நிலையங்களில் (Pump rooms) உள்ள Main Switch, Fuse unit ஆகியவை பழுதடைந்துள்ளதால் மழைக்காலங்களில் அவற்றை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. மேலும் பா்னட்டிவிளை, சீம்பிளிவிளை ஆகிய இரண்டு குடிநீரேற்றும் நிலையங்களில் Kisok Box துருபிடித்து ஆபத்தான நிலையிலும், சீம்பிளிவிளை ஆழ்துளை கிணறு

எண்.13–ன் அருகில் உள்ள குடி நீரேற்றும் நிலையத்தில் பேனல்போர்டு பழுதாகியும் உள்ளது. எனவே மேற்படி பழுதுகளை சரி செய்வதற்கும், அனைத்து குடிநீரேற்றும் நிலையங்களிலும் வயரிங் பணிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.75,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/3532/13)

**தீர்மானம் எண்.737 <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12–ல் துறைமுகத்தெரு மீன்விற்கும் பிளாட்டிற்கு கிழக்கு பக்கம் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையின் தரைகள் மிகவும் மோசமாக பழுதடைந்து குண்டும், குழியுமாக காணப்படுவதாலும், சுவர்கள் மற்றும் படிக்கட்டுகள் சேதமடைந்து உள்ளதாலும், மேற்படி மீனவர் ஓய்வறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2803/13)

**தீர்மானம் எண்.738 <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 12**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2013–14 –ன்கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில், இந்நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் பழுதடைந்த பயணிகள் நிழலகத்தை மாற்றி, புதிய நிழலகம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரம் ஏற்கனவே மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு தீர்மானம் எண். 708, நாள் 30.09.2013 –ன் மூலம் மன்ற ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 04.10.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.03%** குறைவு. |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **1.26%** அதிகம். |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1320/13)

**தீர்மானம் எண்.739 <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**
**<u>குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.</u>**

**பொருள் எண். 13**

இந்நகராட்சி சேவை மையத்தின் Air Condition Machine பழுதாகிவிட்டதால், கணனிகளின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, அவசரம் கருதி சரி செய்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.1050/– வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :அவசரம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பழுதுநீக்கம் செய்தவகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.1050/–ஐ வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ2/544/2006)

**தீர்மானம் எண்.740 <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**
**<u>அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 14**

இந்நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் செல்வன்.பி.விமல்ராஜ் குடும்ப சூழ்நிலை காரணமாக நாகர்கோவில் நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு மாறுதலில் செல்ல விருப்பம் தெரிவித்து விண்ணப்பம் செய்து மன்ற அனுமதி வேண்டியுள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அ.குறிப்பு** : குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.சி1/3505/2013)

**தீர்மானம் எண்.741 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகளுக்கு 18.10.2013 அன்று நடைபெற்ற ஏல விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | வணிக வளாகத்தின் பெயர் | காலியான கடை விபரம் | ஏலதாரர் பெயர், கடை எண் | அரசாங்க கடை வாடகை மதிப்பு | முன்வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை | 16,39,40,57, 58,59 | திரு.சி.பால்ஜோஸ் பாலப்பள்ளம் கடை எண்.39 | ரூ.1,500 | 15,000 |
| 2. | கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் | 19,25,26,31 | திரு.செல்லம், குளச்சல் கடைஎண்.25 | ரூ. 1,000 | 10,000 |

மேற்கண்ட இரண்டு ஏலதாரர் தவிர வேறு எவரும் முன்வைப்புத்தொகை செலுத்தி கடைகளை வாடகைக்கு கோர முன்வரவில்லை. ஆகவே நகராட்சி வருவாய் இழப்பை தவிர்க்க கடைகளை அரசாங்க மதிப்புக்கு வாடகைக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/2035/2002)

**தீர்மானம் எண்.742 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சி குடிநீர் விநியோகம் செய்ய தினமும் வால்வுகளை இயக்கி வருவதால் வால்வுகள் பெரும்பாலும் பழுதடைந்து வருகிறது. எனவே கள்ளியடைப்பு, பள்ளிவிளாகம், ஏசுதாஸ் காலனி ஆகியவற்றில் பழுதடைந்துள்ள 3'' வால்வுகள் மூன்றினையும் மாற்றி புதிய வால்வுகள் அமைக்கவும் அலுவலக வளாகத்தில் உள்ள நீர்தேக்க தொட்டி 6'' குடிநீர் விநியோக வால்வு (Outer supply valve) பழுதடைந்து குடிநீர் வீணாகுவதை தவிர்க்கும் பொருட்டு புதிய 6'' குடிநீர் விநியோக வால்வு (Sluice Valve) அமைக்கவும், இலப்பவிளையில் இக்பால் தெருவில் குடிநீர் அழுத்தம் குறைவாக உள்ளதால் புதியதாக 5'', 3'' இரண்டு புதிய வால்வுகள் (Sluice Valve) பொருத்தவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.60,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/3541/2013)

**தீர்மானம் எண்.743 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக மேல் நிலைநீர்தேக்க தொட்டிக்கு ஆழ்துளை கிணறு எண்.7–ன்மூலம் நீரேற்றும் மின்மோட்டார் பழுதடைந்துள்ளதையும், மேலும் மார்கெட் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு ஆழ்துளை கிணறு எண்.18–ன் மூலம் நீரேற்றும் மோட்டார் பழுதடைந்துள்ளதையும், மேற்படி இரண்டு மேல்நிலைநீர்த்தேக்க தொட்டிகளுக்கும் குடிநீர் வந்து செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகுதிகளுக்கு சீராக வழங்க முடியவில்லை. அவரச அவசியம் கருதி

மேற்படி இரண்டு மோட்டார்களின் பழுதுகளை சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.22,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/3540/2013)

**தீர்மானம் எண்.744 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார்கோவில் அருகில் உள்ள் ஆழ்துளை கிணறு அருகில் 2''பிரதான குழாயில் பழுது ஏற்பட்டுள்ளதையும், இலப்பவிளை ரிபாய் பள்ளியின் அருகில் 6'' பகிர்மான குழாயில் பழுது ஏற்பட்டுள்ளதையும், காந்தி சந்திப்பில் 6''பகிர்மான குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளதையும் சரிசெய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.22,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/3539/2013)

**தீர்மானம் எண்.745 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 அக்டோபர் திங்கள் 30.10.2013–ம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2013–14–ன் கீழ், அரசாணை (D) எண்.492 நாள் 19.09.2013–ன்படி, குடிநீர் வினியோக அபிவிருத்தி பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.38.00 இலட்சத்தில், திட்ட நிதி ஒதுக்கீடாக ரூ.34.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பள்ளிவிளாகம், சாஸ்தான்கரை திருப்பு வரை 4'' பிவிசி பகிர்மான குழாய் அமைத்தல். | 10.00 |
| 2 | இந்நகராட்சி கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து கொட்டில்பாடு வரை 4'' பிவிசி பகிர்மான குழாய் அமைத்தல். | 7.00 |
| 3 | இந்நகராட்சி வி.கே.பி. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பர்னட்டிவிளை வரை 4'' பிவிசி பகிர்மான குழாய் அமைத்தல். | 7.00 |
| 4 | இந்நகராட்சி வி.கே.பி. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பள்ளிரோடு பாலையா மார்பிள் கடை வரை இருபுறமும் பிவிசி பகிர்மான குழாய் அமைத்தல். | 7.00 |
| 5 | இந்நகராட்சி வி.கே.பி. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பாலத்தன்கரை சம்பு வரை 6'' பிரதான குழாய் அமைத்தல். | 7.00 |
| | **மொத்தம்** | **38.00** |

மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**38.00** இலட்சத்தில், திட்டநிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.**34.00** இலட்சம் போக மீதித் தொகை ரூ.**4.00** இலட்சத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு : 1)** பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) திட்ட நிதி ஒதுக்கீடு போக மீதித் தொகை ரூ. 4.00 இலட்சத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/115/13)

**தீர்மானம் எண்.746 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. திட்டநிதி போக மீதி தொகையினை பொது விநியோகத்திலிருந்து செலவிட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள மீன்விற்பனைக் கூடத்திற்கு அருகில் புதிய மீன் விற்பனைக்கூடம் கட்டுவதற்கு ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் நடவடிக்கைகள் செயல்முறை ஆணை எண்.ஆ3/1784/2013 நாள் 19.09.2013–ன்படி நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 18.10.2013–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.64%** அதிகம். |
| 2. | திரு.S.டேவிட்ரராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட **0.02%** குறைவு. |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.02%குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.டேவிட்ராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1320/13)

**தீர்மானம் எண்.747 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சியின் திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பான விளம்பரத்தை தினத்தந்தி தொழில் மலர் 2013–ல் வெளியிட்ட வகையில் ரூ.13,500/– ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/13)

**தீர்மானம் எண்.748 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3–ல் செக்காலத் தெருவில் அமைந்துள்ள வீடுகளின் கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி நின்றதால், சுகாதாரக் கேட்டை தவிர்க்கும் பொருட்டு, நகராட்சி பொது நிதியிலிருந்து சாலையின் நடுவில் வடிகால் ஓடை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி வடிகால் ஓடை அமைக்கப்பட்ட இடம் தவிர மீதமுள்ள இடம் மேடும், பள்ளமுமாக காணப்படுவதால், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,60,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3538/13)

**தீர்மானம் எண்.749 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக லியோன் நகர் அரசு உப்பளம் புறம்போக்கு பகுதியில் மாவட்ட நிர்வாகத்தால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12 மற்றும் 2012–13 திட்டத்தின் கீழ் கட்டுமான பணிகள் மற்றும் சுகாதார பூங்கா அமைக்கும் பணி ஆகியவை நடைபெற்று வருகிறது. மழைக் காலங்களிலும், கடல் சீற்றமாக உள்ள காலங்களிலும் உப்பளம் பகுதிகளில் நீர்மட்டம் 3 முதல் 5 அடி வரை கூடுதலாக உயர்ந்து காணப்படுவதால், மேற்படி பகுதியில் தற்போது செய்யப்பட உள்ள கட்டுமான பணிகள் மற்றும் இதர பணிகளின் பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு கூடுதலாக 3 அடி உயரத்திற்கு கிராவல் கொண்டு நிரப்பி தளத்தை உயர்த்திட கூடுதலாக ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.9,60,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3564/13)

**தீர்மானம் எண்.750 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவையான 62.50 KVA ஜெனரேட்டர் வாங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.508, நாள் 25.03.2013 மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 07.05.2013, 06.06.2013, 28.06.2013 மற்றும் 12.07.2013 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படாததால், பணியின் அவசியம் கருதி துறை மூலம் பணியினை மேற்கொள்ள கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | M/s. Phoenix Engineers,<br>Opp.R.C.Bishop's House,<br>Thoothukudi Main Road,<br>KTC Nager, Tirunelveli. | மதிப்பீட்டை விட 7.41% குறைவு.<br>( ரூ. 4,49,998.64 ) |
| 2. | M/s. Susee Generators,<br>III rd Floor, Pillars Gate,<br>Balamore Road, Nagercoil. | மதிப்பீட்டை விட 6.99% குறைவு.<br>(ரூ. 4,52,000/– ) |
| 3 | M/s.G.S.Power Systems,<br>No.34/26, Lala New Street,<br>Kottar, Nagercoil. | மதிப்பீட்டை விட 2.26% குறைவு.<br>(ரூ. 4,75,000/– ) |
| 4 | M/s.Lingam & Co.<br>Enviran India,<br>Kalliyankadu, Chunkankadi. | மதிப்பீட்டை விட 1.51% குறைவு.<br>(ரூ. 4,55,000/– ) |

மேற்படி நான்கு விலைப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 7.41% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Phoenix Engineers, Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/519/13)

**தீர்மானம் எண்.751 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2012–13 திட்டத்தின் கீழ், காமராஜர் பேருந்து நிலையம் அருகில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும், துறைமுகத்தெரு புனித காணிக்கை மாதா தேவாலயம் அருகில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக காமராஜர் பேருந்து நிலையம் அருகில் அஸ்திவாரம் தோண்டும் பணி மேற்கொண்ட போது பல ஆண்டுகளுக்கு முன் அப்பகுதியில் குப்பைகள் கொட்டப்பட்டு மூடப்பட்டுள்ளது தெரிய வந்தது. எனவே மேற்படி பகுதியில் கூடுதல் ஆழத்திற்கு தோண்டப்பட்டு குப்பைகள் முழுமையாக அகற்றப்பட்டதாலும், புனித காணிக்கை மாதா தேவாலயம் அருகில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டப்படும் இடம் கடற்கரைக்கு மிக அருகில் அமைந்துள்ளதாலும், அருகில் உள்ள நிலப்பகுதி மேற்படி பகுதியை விட சுமார் 7 அடி பள்ளமாக உள்ளதாலும், அப்பகுதி சமப்படுத்தப்பட்டது. மேற்படி இரண்டு பகுதிகளிலும் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளதை விட கூடுதலாக மணல் நிரப்பியும் PCC 1 : 4 : 8 மற்றும் RCC 1 : 1 1/2 : 3 காங்கிரீட் கலவை கொண்டு மேட் பவுண்டேசன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் பக்க சுவர்கள் 15 cm கனத்திற்கு அமைக்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் கடற்கரை பகுதியாக இருப்பதால் உப்பு காற்றின் அரிப்பை தாங்கும் வகையிலும், குடிநீர் கசிவை தவிர்க்கும் பொருட்டும், பக்க சுவர்கள் 25 cm கனத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் காரணங்களால் மதிப்பீட்டை விட கூடுதலாகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 8,70,000/– ஐ தற்போது இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், பின்னர் திட்ட நிதியில் ஈடு செய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2750/12)

**தீர்மானம் எண்.752 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 இக்பால் குறுக்கு தெருவில் ஏற்கனவே வடிகால் ஓடை மற்றும் குடிநீர் குழாய் பதித்தல் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளதால், மேற்படி சாலை பகுதி குண்டும், குழியுமாக உள்ளதால் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் மேற்படி தெரு குறுகலாக உள்ளதாலும், தெருவின் இரண்டு பக்கமும் வீடுகள் சாலையை விட தாழ்வாக இருப்பதாலும், சாலையை மேலும் அதிக அளவு உயர்த்தாமல் டைல்ஸ் பதித்து சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3562/13)

**தீர்மானம் எண்.753 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மாதா காலனி புனித மேரி தொடக்கப்பள்ளியின் அருகில் சாலை குண்டும், குழியுமாக உள்ளதால் மழைக் காலங்களில் மழைநீர் தேங்கும் நிலை உள்ளது. மேலும் வீட்டு எண்.15—173/3—ன் அருகில் மேற்கு நோக்கி செல்லும் தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் வடிகால் ஓடையின் மேல்மூடி உடைந்து, வடிகால் ஓடைக்குள் விழுந்து உள்ளதால், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதோடு, கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி சுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே மேற்படி வடிகால் ஓடையை சுத்தம் செய்யவும், உடைந்த மேல் மூடிகளை சரி செய்து பேவர் பிளாக் சாலை அமைக்கவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 9,25,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3563/13)

**தீர்மானம் எண்.754 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சி அலுவலக நுழைவாயிலில் ‘குளச்சல் நகராட்சி’ அலுவலகம் என்ற வாசகம் பதித்த Arch type நியான் / LED Board அமைக்கவும், இந்நகராட்சி அலுவலகத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ‘தமிழ் வாழ்க‘ வாசகம் அடங்கிய Neon Board தற்போது பழுதடைந்து உள்ளதால் அதனை சரி செய்வதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.55,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3561/13)

**தீர்மானம் எண்.755 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 துறைமுகத் தெருவில் துறைமுக மீன்விற்பனைக் கூடம் அருகில் அங்கன்வாடி மையம் பின்புறம் உள்ள தெருவில் வடிகால் ஓடை இல்லாததால் சாலையின் மேற்பரப்பில் கழிவுநீர் மற்றும் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு மேற்படி பகுதியில் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 4,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3568/13)

**தீர்மானம் எண்.756 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 கொட்டில்பாடு கடற்கரை சாலையில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2012—13 திட்டத்தின் கீழ், பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டு மதிப்பீட்டு தொகைக்குள்ளாக முடிக்கப்பட்டு பிரதான சாலையோடு இணைக்கப்படாமல் உள்ளது. எனவே மேற்படி சாலையானது போக்குவரத்திற்கு பயன்படுத்த

முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி சாலையினை பிரதான சாலையோடு இணைப்பது தொடர்பான பணியினை மேற்கொள்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 8,60,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/3567/13)

**தீர்மானம் எண்.757 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 23 நரிக்கல் சந்திப்பிலிருந்து பாம்பூரி வாய்க்கால் செல்லும் தெரு மண் சாலையாக உள்ளது. இதனால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் நடந்து செல்வதற்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதால் மேற்படி பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 8,20,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3566/13)

**தீர்மானம் எண்.758 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19, நெசவாளர் தெருவில் சி.எஸ்.ஐ.சர்ச் அருகிலுள்ள குறுக்கு தெருவில் வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கு நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்தில் வடிகால் ஓடை அமைத்து பேவர் பிளாக் சாலை அமைக்கவும், சி.எஸ்.ஐ.சர்ச் அருகில் தாழ்வான பகுதியிலிருந்து மேட்டு பகுதிக்கு செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டில் வயதானவர்கள் மற்றும் குழந்தைகள் எளிதாக ஏறும் வகையில் கைப்பிடி அமைப்பதற்கும், முருகன் கோவில் அருகில் வடிகால் ஓடையின் மேல்மூடி மீது டைல்ஸ் பதிப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3565/13)

**தீர்மானம் எண்.759 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பண்டாரவிளையில் அமைந்துள்ள அரசு நடுநிலைப்பள்ளி 113 ஆண்டுகள் பழம்பெருமை வாய்ந்தது எனவும், மேலும் இப்பள்ளி பல இன மாணவர்கள் ஒன்றாக சேர்ந்து பயிலும் புராதன பள்ளியாகவும், குளச்சல் சரகத்திற்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் மிகப் பெரிய பள்ளியாகவும் திகழ்ந்து வருவதாலும் இப்பள்ளியின் வளாகத்திற்குள் உதவி தொடக்கக் கல்வி அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், கிராம அலுவலகம் போன்றவை ஏற்கனவே செயல்பட்டு வருவதாலும், கல்குளம் தாலுகாவை இரண்டாக பிரித்து குளச்சல் தாலுகா அமையும் பட்சத்தில் தாலுகா அலுவலகத்தை இப்பள்ளி வளாகத்தில் அமைக்கவும் முயற்சிகள் நடைபெற்று வருவதாலும், அரசின் கல்வி கொள்கையின்படி, மாணவர்களின் உடல்சார்ந்த திறனை வளர்க்கும் நோக்கில் மேற்படி பள்ளியின் அருகில் அமைந்துள்ள காலி இடமானது விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்பட்டு சரக அளவிலான விளையாட்டு போட்டிகளும் நடத்தப்பட்டு வரும் நிலையில், தற்போது மேற்படி பகுதியில் சுனாமி திட்டம் தொடர்பான கட்டிடங்கள் கட்டுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக தெரிய வந்துள்ளதாலும், அரசு நிதியில் இயற்கை இடர்பாடு சமயங்களில் உபயோகிப்பதற்காக வேறு இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம் பயனின்றி கிடப்பதாலும், மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பள்ளியின் அருகில் காலியாக உள்ள இடத்தில் வேறு எந்த கட்டிடங்களையும் கட்டாமல் தவிர்க்கும் வகையில் கல்வித்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் வருவாய் துறைகளுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற கோரி மேற்படி பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பள்ளி நிர்வாகத்திடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** அரசு நிதியில் இயற்கை இடர்பாடு சமயங்களில் உபயோகிப்பதற்காக வேறு இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம் பயனின்றி கிடப்பதால், மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு அரசு நடுநிலை வளாகத்தில் எவ்வித கட்டிடமும் கட்டப்படுவதை தவிர்க்க மாவட்ட நிர்வாகத்தை மன்றம் கேட்டுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.tpi/3576/13)

**தீர்மானம் எண்.760 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகத்திற்கு தீர்மானம் அனுப்பி வைத்திட முடிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 2013–14–ம் ஆண்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் போது சேதப்படுத்தப்படும் சாலைகள் மற்றும் வடிகால் ஓடை அடைப்புகளை சரி செய்வதற்கும், குடிநீர் வினியோக பணிகளுக்காக பயன்படுத்தப்படும் வால்வுகளை சுற்றி அமைக்கப்பட்டுள்ள வால்வு பிட்டுகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 4,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 690, நாள் 29.08.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 25.10.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு. |
| 2. | திரு.C.தேவகரிம் சேம், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.03% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2828/2013)

**தீர்மானம் எண்.761 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல் அழகனார்கோட்டைவிளை அருகில் கணியாக்குடியில் இருந்து பாம்பூரி வாய்க்கால் செல்லும் சாலையில் வடிகால் ஓடை சரி செய்தல் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 2,10,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 719, நாள் 30.09.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 25.10.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவகரிம் சேம், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.08% கூடுதல். |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3157/2013)

**தீர்மானம் எண்.762 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் தும்பக்காட்டுவிளை குறுக்கு தெருவில் கிரிதங்கம் மருத்துவமனை பின்புறம் உள்ள தெருவில் வடிகால் ஓடையின் தரையை புதுப்பித்து மேல்மூடி மற்றும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 4,20,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 721, நாள் 30.09.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 25.10.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.94% அதிகம். |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3158/2013)

**தீர்மானம் எண்.763 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

குளச்சல் நகர்மன்றத்தின் 3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.என்.முகம்மது தாசிம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.

பல்லாயிரக் கணக்கான இலங்கை தமிழர்களை கொன்று குவித்த இரக்கமில்லாத அரக்க மனம் படைத்த இலங்கை அதிபர் கொடியவன் ராஜபக்ஷே தலைமையில் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று இந்திய அரசை வற்புறுத்திய எட்டு கோடி தமிழ் மக்களின் உள்ளக் குமுறல்களை எண்ணங்களாக வடித்து சட்டமன்றத்தில் அனைத்து கட்சிகளை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றி தந்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.764 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி